புதிய அவையம்
PUTHIYA AVAIYAM
A Peer-reviewed Journal & Bilingual Journal for Arts and Humanities
ज्ञान - विज्ञानं विमुक्तये
UGC Approved Journals
ISSN: 2456-821X
Vol:07, Issue: 02 கட்டுரை ஏற்றுக்கொள்ளப்பட்டது மே 2023 - வெளியிடப்பட்டது ஜூன் 2023
SACRED HEART RESEARCH PUBLICATIONS
June-2023

# சீவக சிந்தாமணியில் இசைக் கருவிகள்

ர. ஜெயந்தி,
பகுதி நேர முனைவர் பட்ட ஆய்வாளர்,
தமிழ்த்துறை,
பாரதியார் பல்கலைக்கழக முதுகலைப் பட்ட மேற்படிப்பு விரிவாக்க மற்றும் ஆராய்ச்சி மையம், பெருந்துறை, ஈரோடு - 638052

முனைவர் இரா. மல்லிகா,
நெறியாளர், உதவிப் பேராசிரியர் மற்றும் துறைத்தலைவர் (பொ.), தமிழ்த்துறை, பாரதியார் பல்கலைக்கழக முதுகலை பட்ட மேற்படிப்பு விரிவாக்க மற்றும் ஆராய்ச்சி மையம்,
பெருந்துறை, ஈரோடு – 638052

ஆய்வுச் சுருக்கம்

'இசை' என்னும் சொல்லிற்கு இசைவிப்பது, தன்வயப்படுத்துவது எனப் பொருள்படும். 'இசை' கல் மனதையும் கரைந்துருகச் செய்யும் பாண்மை மிக்கது. கற்போரும், மற்றோரும் இசையின் வயப்பட்டே நிற்பர். அன்பைப் பெருக்கி ஆருயிரை வளர்ப்பது இசை. இசையைக் கேட்டு இன்புறாத உயிர்கள் இல்லையென்றே கூறலாம். மனிதன், விலங்குகள், பறவைகள், செடிகள், கொடிகள், பாம்புகள் முதலிய உயிர்கள் இசையால் இன்பமடைகின்றன.

மனிதனிடத்து எழுத்தறிவு தோன்றுவதற்கு முன்பே இசைதோன்றி இருக்க வேண்டும். இசையையும், கூத்தையும் விளக்கிய நூல்கள் பல வழங்கி வந்தன. வாய்ப்பாட்டுக் குழலும், யாழும், வீணையும் பக்க மேளங்களாக நின்றன. பண் கேட்டலும், நாடகம் பார்த்தலும் மக்களின் பொழுது போக்குகளில் சிலவாகும். இசைக்கச்சேரி இன்ன முறையில் இயற்றப்பட வேண்டுமென்ற இலக்கணம் வகுக்கப்பட்டிருந்தது. சிலப்பதிகாரம், மணிமேகலை, சீவகசிந்தாமணி ஆகிய காப்பியங்களில் கூறப்பட்ட யாழ் வகைகளும், பண் வகைகளும் தொடர்ந்து இன்றளவும் பயன்பாட்டில் இருந்து வருகின்றன.

சீவகசிந்தாமணியில் இசைக்கலைச் செய்திகளும், ஆடற்கலைச் செய்திகளும் பலவிடங்களில் கூறப்படுகின்றன. அவற்றில் காந்தருவதத்தையார் இலம்பகம் மிகவும் சிறப்பானதாகும். 'காந்தருவதத்தை' என்பதற்கு 'இசைக்கலையில் வல்லவள்' என்றும் 'காந்தருவம்' என்பது 'இசை' என்றும் கூறப்படுகின்றது.

தமிழில் இசைப்பெயர்களாக ஏழினைக் கூறுகின்றனர். அவையாவன குரல், துத்தம், கைக்கிளை, உழை, இளி, விளரி, தாரம் என்பனவாகும். இதனையே வடமொழியில் மத்தியமம், பஞ்சமம், தைவதம், நிஷாதம், ஸட்ஜம், ரிஷபம், காந்தாரம் என்று கூறுகின்றனர். இத்தகைய இசைக்கருவிகளைப் பற்றி ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாக அமைகின்றது.

கலைச்சொற்கள்

குரல், வல்லவள், நுண்ணொலி, உழை, துறவறம், தாரம்.

## முன்னுரை

ஒலிகளின் இயைபே இசையாகும். இது அனைத்து உயிர்ப் பொருள்களையும் இணைக்கும் தன்மை கொண்டது. இசை தமிழர்களின் வாழ்வில் இரண்டற கலந்த ஒன்றாகும். மனித வாழ்வில் இசையானது இன்ப நிலை, துன்ப நிலை ஆகிய இரண்டு நிலைகளில் இசைக்கப்பட்டுள்ளன. சிறியவர் முதல் பெரியவர் வரை கற்றவர், கல்லாதவர், இல்லறம் ஈடுபட்டோர், துறவறம் ஈடுபட்டோர் என பலருக்கும் பயன்படும் வகையில் இசைகள் இசைக்கப்பட்டுள்ளன. மனிதனின் மனநிலைக்கேற்ப இசைகளின் தேவைகள் உணரப்பட்டன. சங்க இலக்கியம், காப்பிய இலக்கியங்கள் என இசைக்கு முக்கியத்துவம் கொடுத்து பல

இலக்கியங்கள் தோன்றியுள்ளன. அவற்றில் சீவகசிந்தாமணியில் பயன்படுத்தப்பட்டுள்ள இசைக்கருவிகள் பற்றி ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

இசைக் கருவிகளின் தோற்றம்

ஆரம்ப காலத்தில் கலைஞர்கள் தமக்குரிய கலைக்கருவிகளைத் தாமே செய்து கொண்டனர். இக்கருவிகளை செய்வதற்கான மூலப் பொருட்களை இயற்கையிடம் இருந்தே பெற்றனர். இசையின் மூலமே மகிழ்ச்சியை அடைய முடியும் என்று நம்பினர் அதன் விளைவாகவே இசைக் கருவிகளை அவற்றிலிருந்து வெளிவரும் ஓசைக்கேற்ப வடிவமைத்தனர். இவ்வாறு வடிவமைக்கப்பட்ட கருவிகள் பெரும்பாலும் தோலைக் கொண்டும், நரம்புகளைக் கொண்டும், துளைகளிட்டும் ஒலி எழுப்பப்பட்டுள்ளன. இவ்வகையான இசைக் கருவிகளைக் கொண்டு பாடலும், ஆடலும் நிகழ்த்தப் பெற்றன. உழைத்துக் களைத்த மனிதனுக்கு இஃது ஒரு பொழுது போக்காகவும், மனநிறைவையும் ஏற்படுத்தியது. யாழ் பற்றிய இலக்கண நூல் இருந்ததனை தொல்காப்பியம்,

'அளபிறந்து யிர்த்தலும் ஒற்றிசை நூடலும்
உளவென் மொழிப இசையோடு சிவணிய
நரம்பின் மறைய என்மனார் புலவர்" (தொல்., எழுத்து, நூ.33 )

என்று கூறுகிறது.

இசையினைத் தமிழில் ஏழு வகையாகப் பிரிக்கின்றனர். குரல், துத்தம், கைக்கிளை, உழை, இளி, விளரி, தாரம் என்பனவாம். இதனையே வட மொழியில் கூறும் பொழுது ஸட்சம், ரிஷபம், காந்தாரம், மத்தியமம், பஞ்சமம், தைவதம், நிஷாதம் என்று கூறப்படுகிறது.

யாழ் அமைக்கும் முறை

சீவகன் அறுபத்து நான்கு கலைகளிலும் வல்லவனாகத் திகழ்கின்றான். அவன் காந்தர்வதத்தையுடன் யாழ்போரில் போட்டியிடுவதற்காகச் செல்கின்றான். காந்தருவதத்தையினுடைய தோழி வீணாபதி சீவகன் மீட்பதற்குரிய யாழை எடுத்துக் கொடுக்கிறாள். அந்தத் தோழி எடுத்துக் கொடுக்கின்ற யாழ்களில் எல்லாம் இருக்கின்ற குறைகளை சீவகன் கூறுகின்றான். ஒரு யாழை நீட்டுகிறாள் அதைப் பார்த்து இது அழுகிய மரத்தினால் செய்யப்பட்டது என்கிறான். மற்றொரு யாழைப் பார்த்து இதுவும் அதே என்று கூற மூன்றாவது யாழை வீணாபதி கொடுக்க இது விழுந்த மரத்தினால் செய்யப்பட்டது என்று கூறி மறுத்த நிலையினை,

'நீர்நின் றிளகிற் றிதுவேண்டா நீரின் வந்திது போக
வார்நின் றிளகுமுலையினாய் வாட்டிண்ணுற்ற திது நடக்க
ஒருமுருமு றிதுவுண்ட தொழிவொண்பொ னுகு கொடியே
சீர்சால் கணிகை சிறுவன்போற் சிறப்பின் நம்ம விது வென்றாள்"

(சீவகசிந்தாமணி, காந்தருவதயார் இலம்பகம், பா. 718)

என்று சீவகன் கூறுகிறான். இங்ஙனம் யாழுக்கான இலக்கணத்தையும், யாழ் செய்வதற்கான இலக்கணத்தையும் சீவகன் அறிந்திருந்தமையை அறிய முடிகிறது.

யாழ் கருவி

யாழ்க் கருவியில் கட்டப்பட்டிருக்கும் நரம்புகளைக் கொண்டு நுண்ணிய இசை வேறுபாடுகளைப் பழந்தமிழன் கண்டறிந்தான். நரம்புகளை இணை, கிளை, பகை, நட்பு என்று ஒன்றோடொன்று சேர்ந்து ஒலிக்கும் ஒலியைக் கொண்டு கண்டறிந்தனர். யாழிசைப்பதில் வல்லவர்கள் பாணர்கள் யாழிசைக்கு யானையும் கட்டுப்பட்டு நிற்கும் செய்தி கலித்தொகையில் குறிப்பிடப்பட்டுள்ளது. பழங்காலத்தில் வில் வடிவமான யாழையே வீணை என்றனர். கடை என்னும் வெண்மையான பிறை போன்ற சிறு கட்டையால் நரம்புகளின் சுருதி கட்டப்பட்டிருந்தன.

பட்டினால் செய்யப்பட்ட பல நிறங்களை வளைத்துக் கட்டி, மலர் மாலைகளைத் தோரணமாகத் தொங்கவிட்டு, மணம் விசும் சாந்தினால் நிலத்தை மெழுகி, மெல்லிய பூக்களைத் தூவி அகிற்புகையிட்ட அரங்கில் காந்தருவதத்தை வானின் இள நங்கை போல் அமர்ந்தார். இசையாழை எடுத்துப் பண்ணை எழுப்பி நரம்பைத் தெரிவித்தாள். கருங்கொடி போன்ற புருவம்

ஏறாது, கண் ஆடாது, கண்டம் விம்மாது, பல் தோன்றாது வாய் திறந்து பாடுகிறாள் என்று யாழோடு இசைந்து காந்தருவதைப் பாடியதைத் திருத்தக்கதேவர்,

'கருங்கொடிப் புருவம் ஏறா கயல் நெடுங் கண்ணும் ஆடா
அருங்கொடி மிடறும் விம்மாதுஅணிமணி எயிறும் தோன்றா
இருங்கடல் பவழச் செவ்வாய் திறந்து இவள் பாடினாளோ
நரம்பொடுவீணை தடவி நாவின் நவின்றதோ என்று தைந்தார்"

(சீவகசிந்தாமணி, பா. 658)

என்று குறிப்பிடுகின்றார். இதனையே மணிமேகலையில்,

'மகர யாழின் வான்கொடு தழீஇ' (மணிமேகலை, பளிக்கறை, பா.56)

என்று கூறுகின்றது. இம்மகர யாழானது மீனின் தோற்றத்தைக் கொண்டதால் இப்பெயர் பெற்றது.

உடலுறுப்புக்களில் இயக்கம் மிகக் குறைந்து இசையின் அழுத்தம் குறையாது சிறப்புடன் காந்தருவதை பாடினாள். பருந்து பறக்கும் போது நிழல் அதனைத் தொடர்வது போல் மிடற்றிசையும், யாழிசையும் இணைந்து இருத்தல் வேண்டும் என்பதனை,

'பருந்தும் நிழலும் போல் பாட்டும் ஏழாலும்
திருந்துதார்ச் சீவகற்கே சேர்ந்தனவெண் றெண்ணி"

(சீவகசிந்தாமணி, பா.730)

என்ற சிந்தாமணியின் பாடலின் வழி அறியலாம். வாயில் ஏற்றி இறக்கிப் பாடுவது போல் யாழிலும் ஏற்றி இறக்கி மேலும், கீழுமாய் இசைத்தல் வேண்டும் இத்தகைய இசையறிவு காந்தருவதத்தையிடம் இருந்தது.

''கருவியிசை தோன்றிய பின்னர்தான் இசையில் மிக நுண்ணிய ஒலிகள் அவற்றின் ஒப்புமை ஆகியவை பழந்தமிழரால் அறிந்து உணரப்பட்டிருக்க வேண்டும். இக்கருத்தினை இந்திய இசையில் நுண்ணொலிகள் அவற்றின் சேர்க்கை மாறி மாறி ஒலிக்கும் தன்மை அவற்றால் கேட்கப்படும் ஒலிக்கூறுபாடுகள், அவற்றின் ஒப்புமை, ஒப்புமையின்மை யாவும் கருவிகளின் வழியே தான் மிக்க பழங்கால இந்திய மக்களால் அறிந்துணரப்பெற்றனர் என்ற கருத்தாலும் அறியலாம்'' (சுந்தரேசனார், இசைத்தமிழ்த் தன்மை, ப.160)

இசைக் கலைக்கு உறுதுணையாக அமையும் இசைக் கருவிகளில் தலைமையானது யாழாகும். யாழினை சீறியாழ், பேரியாழ் என இரு வகையாகக் கூறுவர். யாழ் உறுப்புகளில் ஒன்று நரம்பாகும். இதனை தீம்தொடை நரம்பு என நற்றிணை குறிப்பிடுகிறது.

''காந்தள் ஊழிய மனிநிறத் தும்பி
தீம்தொடை நரம்பின் இமிரும்
வான்தோல் வெற்பன் மார்பு அனங்கு எனவே' (நற்றிணை, பா. 10-12)

அகநானூற்றில் யாழ் பற்றிய செய்திகள் இடம் பெற்றுள்ளன. அவற்றுள்,

'பையுள் நல்யாழ் செவ்வழி வகுப்ப
ஆடுயிர் உணங்கும் தெள்ளிசை" (அகம், பா. 13-14)

என்ற பாடலடிகள் அனைத்து உயிர்களும் இசைக்கு உருகும் என்பதை உணர்த்துகின்றன. திதியன் என்பவன் தன் அவையில் சிறப்பாகச் சீறியாழ் இசைத்த பாணர்களுக்குப் பல பரிசுகள் வழங்கி மகிழ்ந்தான் என்பதை,

'அருந்துறை முற்றிய கருங்கோட்டுச் சீறியாழ்ப்
பாணர் சூர்ப்ப பலகலம் உதவி
நாளவை யிருந்த நனைமகிழ் திதியன்" (அகம், பா.331:10-12)

என்ற பாடல் தெரிவிக்கின்றது.

தொல்காப்பியமும் யாழ் என்னும் இசைக்கருவி பற்றிய செய்தியினைத் தந்துள்ளது. பண்டைக் காலத்தில் பாணர்கள் என்ற இசை பாடும் மரபினர் இருந்தனர். பாடினி, விறலி என்ற பெண்களும் பாடல் ஆடலில் வல்லவராய் இருந்தனர் அவர்கள் மன்னன், சிற்றரசன், செல்வர் போன்றவர்களைப் பாடிப் பொருள் பெற்று வந்தனர் என்பதை,

'துறையமை நல்யாழ் துணைமையோர் இயல்பே" (தொல்காப்பியம், நூ.89)

என்று தொல்காப்பியர் கூறுவதிலிருந்து அறியலாம்.

நெடுநல்வாடையில் ஆடல் மகளிர் கருங்கோட்டுச் சீறியாழ் நரம்பைத் தம் மார்பில் ஒற்றி வெம்மை ஏற்றி மீட்டு அதற்குத் தக்கவாறு மிக இனிமையாகப் பாடினார் என்ற செய்தியை,

'தண்மையிற் றிரிந்த இன்குரல் தீம்தொடை
கொம்மை வருமுலை வெம்மையில் தடைஇ
கருங்கோட்டுச் சீறியாழ் பண்ணுமுறை நிறுப்ப" (நெடுநல்வாடை, பா. 67-70)

இவ்வாறு தமிழ் இலக்கிய நூல்களில் பல இடங்களில் இசைக் கருவியான யாழ் பற்றிய செய்திகள் இடம்பெற்றுள்ளன. யாழ் பற்றி வளையாபதியில்,

'எங்ஙனம் பட்டனன் பாண்மகன் பாண்மகற்கு
அங்ஙனம் ஆகிய யாழும் புரைய" (வளையாபதி, பா. 54)

என்கிறது. மேலும்,

'யாறொரு யாழ்ஞெலி கோணில வார்கொடிப்" (வளையாபதி, பா.51)

கணிகையர் குல பெண்ணிற்கு யாழினை போல் திகழ வேண்டும் என்று முதியவள் கூறுவதாக அமைகிறது.

பிங்கல நிகண்டு

யாழ் பற்றியது இருப்பத்தொரு திறன் என்று பிங்கல நிகண்டு கூறுகிறது. குறிஞ்சி யாழ்த்திறம் - 8, மருத யாழ்த்திறம் - 4, செவ்வழி யாழ்த்திறம் - 4, பாலை யாழ்த்திறம் - 5 என்பனவாகும். இதனை

'அராகம் நேர்திற முறுப்புக் குறுங்கலி
ஆசா னைந்தும் பாலையாழ்த் திறனே" (பிங்கலத்தை நிகண்டு)

என்று குறிப்பிடுகிறது.

முற்பிறவியில் செய்த நல்வினையுடையவளாகிய பெருமைமிகு இசை நூல்களில் கூறிய கலைகள் முற்றும் அறிந்தவள் காந்தருவதத்தை, அவள் எழுப்பும் யாழின் இன்னிசை மூலம் மன்மதனையும் கனிவிக்கும் இயல்பினாள் என்பதை,

"மூரி நூல் கலைகள் யாவும்
கற்றவள் கனம்கொள் நல்யாழ் அணங்கனைக் களிக்கும் நீராள்"
(சீவகசிந்தமாணி, பா.607)

என்று சீவகசிந்தாமணி ஆசிரியர் குறிப்பிடுகிறார். கூரிய நகத்தால் வலிய மலரச் செய்து தொடுத்த ஒரு செங்கழு நீர் மாலையை நல்லிசை நல்கும் வீணையின் மேல் சூட்டி, உலகெல்லாம் உணர்ந்த அருகப் பெருமானைக் குறித்துப் பெண் கொடியாகிய கேமசரி பாடிக் கொண்டிருந்தாள் என்பதனை,

'கூருநிர் விடுத்த தோர் கோல மாலையை
பேரிசை வீணைஇயல் சூட்டிப் பெண் கொடிக்
காரினை உலகுணர் கடவுள் பாடுமே" (சீவகசிந்தாமணி, பா. 1466)

என்று வீணை வாசிப்பின் சிறப்பினையும் அதனோடு பாடலின் தன்மையினையும் வருணிக்கிறார் திருத்தக்கதேவர். யாழிசைக் கருவிக்கு மலர் மாலையைச் சூடுதல் மரபு என்பதனைக் கம்பராமாயணமும்,

'அன்ன மாலையை யாழிடைப் பிணித்து"
(கம்பராமாயணம், பாலகண்டம். 9)

என்று குறிப்பிடுகின்றது.

விமலையைத் தூக்கத்தை விட்டு எழுப்புவதற்காக மங்கையர்கள் இனிய பண்ணமைத்து மருத யாழினையும், குழலினையும் ஒன்று கூடி இசைத்தனர். இதனை,

'மங்கையர் பண்ணிய மருத யாழ்குழல்" (சீவகசிந்தாமணி, பா. 199)

என்று சிந்தாமணி குறிப்பிடுகிறது. பதுமையார் இலம்பகத்தில் தேசிகப் பாவை என்னும் ஆடல் நங்கை தான் தங்கியிருந்த சோலையில் தன் தனிமைத் துயர் தீர அழகிய யாழிசைத்துப் பாடினாள் என்பதை,

'தேனடைந் திருந்த கண்ணித் தெண்மட்டுத் துவலை மாலை
ஊனடைத் திருந்த வேற்கண் ஒன்டொடி உருவ வீணை
தானடைந்திருந்த காலில் பாடினாள் தனிமை தீர்வான்
கூனடைந் திருந்த திங்கள் குளிர்முத்த முளையினாளே"

*(சீவகசிந்தாமணி, பா. 1355)*

*மகளிர் யாழினை மீட்கும் தன்மையை வாசிப்பு சிறப்பாகக் குறிப்பிட்டுள்ளது. சோலையிலும் யாழ் வாசிக்கின்றனர். அரசனின் அரண்மனையிலும், யாழொலி பிறக்கின்றது. யாழ் வாசித்தல் பல இடங்களில் கூறப்படுவதால் யாழிசை அன்றைய மக்களின் வாழ்வில் பேரிடம் பெற்றிருந்ததெனத் தெளிவாகின்றது.*

*முடிவுரை*

*இலக்கியங்களில் இசைக்கு முக்கியத்துவம் அளித்து வந்ததை அறிய முடிகின்றது. சிலப்பதிகாரம், மணிமேகலை, சீவகசிந்தாமணி, வளையாபதி, சங்க இலக்கியங்கள் ஆகியவற்றில் யாழ் கருவியைப் பற்றியும் யாழின் சிறப்பினையும் அவற்றின் வகைமையையும் அறிய முடிகிறது. யாழ் பற்றிய விளக்கங்கள் சீவகசிந்தாமணி விளக்கமாகக் கூறுகின்றது. பொதுவாக இசையின் பெருமையையும் அதனுள் திளைக்கும் பான்மையையும் சிந்தாமணி கூறுகிறது. அன்றைய கால கட்டங்களில் யாழிசையானது மனிதர்களுடன் ஒன்றி காணப்பட்டது என்பதனை இதன் வழி நாம் அறிந்து கொள்ள முடிகின்றது. யாழானது இன்று பல வடிவங்கள் பெற்று புதுவகை இசைக்கருவியாக மாற்றம் பெற்றுள்ளதை நாம் அறிய முடிகிறது.*

---

*துணைநூற்பட்டியல்*


1. *இளம்பூரணர் (உ.ஆ.), தொல்காப்பிய எழுத்ததிகாரம், கழக வெளியீடு, சென்னை, முதற்பதிப்பு, 1974*
2. *இளம்பூரணர் (உ.ஆ.), பிங்கல நிகண்டு மூலமும் உரையும், மதராஸ் ரிப்பன் அச்சியந்திர சாலை, சென்னை, முதற்பதிப்பு 1917*
3. *இராசாராம். துரை, சீவகசிந்தாமணி விளக்கவுரை, முல்லை நிலையம், 9 பாரதி நகர், தி.நகர், சென்னை, முதற்பதிப்பு 2001*
4. *கம்பர், கம்பராமாயணம், உவே.சா., உ.வே.சா. நூல் நிலையம், சென்னை, முதற்பதிப்பு 1967*
5. *சுந்தரேசனார், இசைத்தமிழ்த் தன்மை, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்., அம்பத்தூர், சென்னை - 600098, முதற்பதிப்பு, 1987*
6. *திருத்தக்கதேவர், சீவகசிந்தாமணி மூலமும் நச்சினார்க்கினியர் உரையும், தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர், முதற்பதிப்பு, நவம்பர் 1986*
7. *புலியூர்க்கேசிகன் (உ.ஆ.), அகநானூறு மூலமும் உரையும், சாரதா பதிப்பகம், சென்னை-14, முதற்பதிப்பு 2010*
8. *வளையாபதி, திருநெல்வேலித் தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், திருநெல்வேலி-6, 1970*
9. *வேங்கடசாமி நாட்டார், ந.மு.(உ.ஆ.), நற்றிணை, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, முதற்பதிப்பு 1981*
10. *வேங்கடசாமி நாட்டார், ந.மு.(உ.ஆ.), பத்துப்பாட்டு, மறுதோன்றி அச்சகம், தமிழ்ப்பல்கலைக்கழகம், தஞ்சாவூர் முதற்பதிப்பு 1986*


********* ********* ********** ********* ********* ********** ********** **********